



ஓலை 114| ஓசை 237| மார்ச் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**அறங்கூறா னல்ல செயினும் ஒருவன்**
**புறங்கூறா னென்றல் இனிது.**

## பொருள்

**ஒருவன் அறத்தைச் சொல்லாமல் பாவமே செய்தாலும், அடுத்தவரைப் பற்றிப் புறம் பேசமாட்டான் என்றால் அதுவே அவனுக்கு நல்லது**

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

**அகர முதல இலக்கியப் பேரவை**

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

# ஔவை மொழியில் அமுதப் பாக்கள்

## சுற்றத்திற் கழகு சூழ விருத்தல்!

## நேரிசை வெண்பா - அந்தாதி

செல்வம், உடைமைகள் சேர்ந்திருந்தால் நன்மையில்லை.
எல்லோரும் சுற்றமாயி ணைந்திருத்தல் - நல்லோர்க்
கழகே; துயர்துன்பம் ஆட்டும்போ தெல்லாம்
வழுக்காத சுற்றமே வான்.

வானத்தில் கோள்கள் வகையாகச் சூழ்ந்திருக்கும்;
ஆனவரை என்று(ம்) அவையாக - ஞாலத்தில்
சுற்றங்கள் ஒன்றாகச் சூழ்ந்திருத்தல் பேரழகே;
பற்றிக்கொள் பாங்காய்ப் பணிந்து,

பணிவுடன் அன்பறம் பற்றுடன் போற்றி,
அணியாய் உறவை யணுகு வணிகமல்ல
சுற்றமேதான் என்றுணர்ந்தே சூழ்ந்தன்பை யூற்றிவை;
அற்றிடாச் சுற்ற(ம்) அரண்.

அரணாகச் சுற்றம் அமைந்திடவே அன்பை
மரவிதையாய் ஊன்று மனத்தில் - வரலாகா
எப்பகையும் ஏற்றத்தாழ் வெண்ணியேதான்; வையத்தை
எப்பொழுதும் சுற்றமாய் ஏற்று.

ஏற்றே மலைக்காட்டி லெல்லா மரங்களையும்
போற்றியே சுற்றமாய்ப் பொங்கியின்பம் -ஏற்கும்;
இயற்கையைப் போன்றே இயல்பாய் இணைந்தே
உயர்ந்தென்றும் வாழவே ஓடு

ஓடையை ஆறதுவும், ஓடுமாற்றை ஆழ்கடலும்,
ஆடையணி யேற்றதுபோற் ஆற்றலுடன் - ஓடையாகு;
சுற்றமில்லா வாழ்வும் சுடுகாடே என்பதனால்
வற்றிடாச் சுற்றமுடன் வாழ்.







**இலக்கணக் குறிப்பு:**

நான்கடிகள் கொண்ட அளவடி வெண்பாவாகும். மூன்றடி நான்கு நான்கு சீர்களாக வந்து, நான்காமடி மூன்று சீர்கள் வந்து முடியும். இரண்டாம் அடியில் நான்காம் சீர் முதலடியின் எதுகையைக் கொண்டு தனிச்சொல் வரும். ஈற்றுச் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாட்டில் முடியும். இரண்டடிக்கோர் எதுகை பெற்று வரும். ஒவ்வொரு அடியின் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் மோனை அமையும் குற்றியலுகரம் நோக்க வேண்டும். இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் கலந்து வரும். செப்பலோசை இருத்தல் வேண்டும். வெண்பாவின் ஈற்றுச் சீரை வைத்து அடுத்த வெண்பாவைத் தொடங்குவது அந்தாதியாகும்

நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

## இன்னிசை வெண்பா

தமிழினி மெல்ல தரணியில் வெல்லும்.
தமிழே அமிழ்தெனத் தக்கோர் உரைப்பர்
தமிழில் கலைச்சொல் துடிப்புடன் பேசும்
தமிழினம் போற்றுந் தகை.

## நேரிசை வெண்பா

முத்தமிழ் என்றே முழங்கும் தமிழதுவே
முத்தி அளிக்கும் முதுமொழி-முத்திரையே
தண்டமிழின் வேதம் தனித்தே விளங்கத்
தமிழே உலகின் தலை.

## இன்னிசை சிந்தியல் வெண்பா

இயலாய் இருந்தே இசைத்திடும் கூத்தாய்
உயர்தனிச் செம்மொழியாய் உச்சத்தில் நிற்கும்
கயமென உள்ளிக் களி.



## நேரிசை சிந்தியல் வெண்பா

உயிரும் உடலுமாய் உள்ள உணர்வை
உயிர்ப்பாய்த் துடிப்புடன் செப்ப -உயிர்த்தே
உயிர்நிலை காட்டும் உணர்.

## குறள்வெண்பா

தமிழினி மெல்லத் தரணியில் வெல்ல
அமிழ்தாய் இனிக்கும் அறி.


கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை

# இரட்டை வேடம்

இட்லி
எப்படி இருக்குமென
கேட்ட பிள்ளைக்கு
நிலவைக் காட்டுகிறாள்
ஒரு தாய்.
தோசை
எப்படி இருக்குமென
கேட்ட மகனுக்கு
அதே
நிலவைக் காட்டுகிறாள்
மற்றொரு தாய்.
ஓரிரவில்
வானத் திரையில்
இட்லி தோசையென
இரட்டை வேடத்தில்
கலக்குகிறது நிலா.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

ஆடலாம்
பாடலாம்
குதிக்கலாம்
ஓடலாம்
விளையாடலாம்
சமையல் செய்யலாம்
பளு தூக்கலாம்
இன்னும்
என்னென்னவோ செய்யலாம்
எல்லாம் செய்யலாம்

எங்களுடைய நாப்கினை பயன்படுத்தினால் கோவிலுக்குச் செல்லலாம் என்று மட்டும் ஒரு நாப்கின் விளம்பரம் ஏன் இன்னும் வரவில்லை.

-- பிருந்தா சேது

ஒரு பதிலுமற்ற
சில கேள்விகள்
ஓடி ஒளிகின்றன
ஆணாதிக்க இருளில்

அறிவை மழுங்கடிக்கும்
அர்த்தமற்ற விளம்பரங்கள்
அழையா விருந்தாளியாய்
அரங்கேற்றும் கேலிக்கூத்துகள்

5. பதுமையார் இலம்பகம் .



குற்றம் அற்ற பண்புடைய சீவகன்
"மற்ற நாடுகளைக் காண விழைகிறேன்
கிணற்று மீனல்ல என் வாழ்க்கை"
உற்றநண்பன் அழைத்துச் சென்றான்

அதனால் பிறநாடுகள் கண்டான் சீவகன்
முதலில் மலைப் பகுதிக்குச் சென்றார்கள்
"இதன் அடிவாரம் இருண்டு காணப்படும்
அதில் சாரணர் வசித்து வருகிறார்கள்"

"அவர் வாழ்வின் பற்று துறந்தவர்கள்
இவர் பிறப்பின் முன்வினை அறிவர்
எவரும் நெருங்கி பழக முடியாதவர்
மூவுலகும் அறிந்த துறவி சாரணர்"

"அடுத்து பெருந்திரள் காடு உள்ளது
விடுகதைபோல் புதிரானது இக்காடு
பேரச்சம் தரும் பேய்கள் இருப்பிடம்
அச்சம் தவிர்த்தால் சுற்றி வரலாம்"

"பேய் மகளிர் உன்னைக் காமுறுவர்
தாய்மையை உணராத சாபம் உண்டு
சேய்மையில் இருந்து பார்த்தலே நலம்
அப் பேய் மகளிரை தழுவற்க"

பல நாடுகள் உல்லாச புரிகள்
நலமான மக்கள் வசிக்கும் நகர்
சுலபமாக நாயகன் ஆனான் சீவகன்
யாழ் இசை காதல் மன்னன்.

குளிர்ச்சி பொருந்திய சித்திரக்கூடம்
தெளிந்த நீரோடும் ஆறு அஞ்சனமா நதி
களிப்பூட்டும் வரகு விளை நிலம்
வனப்பு மிகுந்த தக்க நாடு

நல்ல மலர்கள் நிறைந்த குளங்கள்
தில்லானா ஆடும் தாமரைப் பூக்கள்
செல்லாத இரும்பை பொன்னாக மாற்றும்
தில்லானஇரசவாதநீருடைய குளம் .

எல்லா நோயையும் நீக்கும் குளம்
நல்ல அறுசுவை சுனையும் உண்டு
எல்லாம் கண்டு ரசித்த சீவகன்
நல்ல நண்பனுடன் நாடு திரும்பினான்

நன்றியுடன் சுதஞ்சனன் மேலும் கூறினான்
"என்றும் எதற்கும அஞ்சாமல் வாழ்க
இன்று உரைப்பேன் கவனமாக கேள்
மூன்று மந்திரங்கள் நினைவில் கொள்."

காமனும் விரும்பும் இன்குரல் தருவது
எந்த விடமானாலும் நஞ்சை முறிப்பது
நினைத்தபடி வேண்டிய உருவம் பெறுவது
இவை என்றும் அறியுமாறு கூறினான்.

கவிஞர் ந. திருக்கோமு

# மருதக்கிழான்

அற்றுக்கும் பயனில்லா அறிக்கை
ஒற்றில்லா ஓலைக் குடில்
அறுக்கும் இன்னார் படை.

உப்பளம் காய்ச்சித் திரட்டிய
ஊதியம் உப்பாய் கரைகிறது
ஒப்பில்லாதவன் ஆட்சியில்.

கூளியர் கொடி தழைக்க
பேயன் அடி தொழும் மீளி
கழனி அறுக்கும் காடையர்

நிரை கவரும் கள்வன்
நிலை குலைந்த உழத்திகள்.
காடையர் செருக்கு வீழ்த்த
களம் புகுந்தான் மருதக்கிழான்.



கவிஞர் செ. தமிழ் நேயன், தமிழ் நாடு

# காலைப்பொழுது

காலைப்பொழுது
எல்லோருக்கும் ஒரே மாதிரி இருப்பதில்லை.
அடிக்கும் அலாரத்தை தலையில்அடித்து
அரக்கபரக்க எழுந்து
காக்கா குளியல் குளித்து
பேருந்தைப்பிடிக்க
நடைபயணம் மேற்கொண்டு
நேரத்திற்க்கு பேருந்தை பிடிக்க எண்ணி
பேருந்து கிடைத்தாலும்
நேரத்திற்க்கு கிடைக்கவேண்டுமென
கடவுளை வேண்டி

பேருந்து கிடைத்தாலும்
இருக்கை கிடைக்கவேண்டுமென எண்ணி
இருக்கை கிடைத்தாலும் பக்கத்திலிருப்பவன்
பாடாய் படுத்தாமல் இருக்கவேண்டுமென எண்ணி
பாடாய் படுத்தினாலும் நாம்
பக்குவமாய் இருக்க வேண்டுமென எண்ணி

பக்குவமாய் இருந்தாலும்
நம்மனம் பாதிக்கப்படாமல்
இருக்கவேண்டுமென எண்ணி
வேலைக்குச்சென்று வீடு திரும்பும் வரை
சின்னாபின்னமாய் சிறகடித்தாலும்
ஒரே ஆறுதல்

வேலை இருப்பவனின் காலையைவிட
வேலை இல்லாதவனின் காலை
கொடுமையானது



கவிஞர் நுஸ்ரா முஹம்மது அலி ஜின்னா

# எஞ்சிய சொல்லில் இல்லை என் காதல்



மௌனத்தின் வார்த்தைகள்
இதயத்தின் ஓசைகள்
அலங்காரச் சொற்கள்
என்னிடம் இல்லை

கற்பனைத் திறனது
கடுகளவும் சிந்தையில் இல்லை
விழிகளால் கவர்ந்தே
காதலின் மொழியானேன்

துடிப்பினை உணர்ந்தேன்
துள்ளலில் மகிழ்ந்தேன்
உள்ளத்து உணர்வுகளை
உள்ளபடி சொன்னேன்

எஞ்சிய சொல்லில்
இல்லை என் காதல்
விரும்பிடும் எண்ணத்தை
தயங்கியே கூறினேன்

அவளும் நாணத்துடன்
அன்பைக் கூறினாள்
விந்தையாய் தோன்றிட
வியப்பில் ஆழ்ந்தேன்

ஒன்றான நெஞ்சமதில்
ஓராயிரம் நினைவுகளே
நிழலும் நிசமாகிட
மெய் சிலிர்த்தேன்

மெய்யுரைத்து பேசிய
சொற்களில் பரவசமே
பொய்யேதும் இல்லை
பொன்னான தருணமே

வார்த்தைகள் மிச்சமில்லை
வஞ்சியிடம் உரைத்திடவே
எனது நேசமது
எஞ்சிய சொல்லில் இல்லை
என் காதல்

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# உனதான ப்ரியம்

காணாதே உன் மீது காதல் கொண்டதே
என் மனம்  மாறாதே வடிவமாய்
தினந்தோறும் நினைக்க தோன்றுதே
என் எண்ண அலையில்
நீ நீந்துகையில் நான் எப்படி
விழிமூடுவேன் நிம்மதியாய்.

ஆறாத காயம் மாறாததைப்போல
நீயும் சிறிது சிறிதாய்
வலிக்க செய்தே பார்க்கிறாய்.

தவழும் குழந்தையின் அவசரம் போல
என்னுள் ஆர்வ கீற்று
எப்போது சந்திப்பேனென்று.

சிந்தும் மழை
தரை தொட்டு செல்வதைப்போல
என்னை தொட்டு செல்லும் உன் நினைவில்
கன்னம் வழியும் கண்ணீரும்
நியாபகத்தை நீக்கிடுவதில்லை.

கரம் பற்றி கொண்டு பாரம் நீக்கிட வேண்டும்
தோள் சாய்ந்து
மன சோர்வுகளை நீக்கிட வேண்டும்.

பொழுதுகள் விடிகிறதுதான் எனதான விடியல்
எப்போதென்றே தேடல் தொடருதே.

படியும் கரைசல்கள் போல
நெடியும் உனதான உரசல்கள்
விடியும் வேலை கடிகார ப் பறவைகளோடு
என்னுள் நீயும் ஊரத்தொடங்குகிறாய்.

என்ன செய்தால் தகுமோ
உன்னை சந்தித்திடத்தானே வேண்டும்.



கவிஞர் சஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி, புத்தளம்

# கரமில்லா ஓவியன்



கருத்து நிறைந்த கண்கவர் ஓவியன்
காற்றில் தூரிகையோடு கைகளும் பேசும்
எண்ணத்தின் ஓட்டம் எழுத்தால் சித்திரித்து
பாவையோடு பல கதைகள் பேசும்

இயற்கையோடு இணைந்த காதல் அவளோடு
சித்திரமாய் தீட்டி காதலைச் சொல்ல
கன்னத்தில் முத்தமிட்ட தருணம் சிலிர்க்க
ஏக்கங்கள் நிறைந்த வாழ்க்கை இங்கு

ஓவியன் வாழ்க்கையில் பல திருப்பங்கள்
எதிர் பாராத உணர்வோடு வாழ்கிறான்
வாயில்லா உயிரினங்களுக்கும் இவன் உயிரூட்டி
மெய் சிலிர்க்க வைத்தது நம்மை

பாசாங்கு பார்வை இவனிடம் கண்டதில்லை
கரைகளை தட்டி எழுப்பி புதுயுகமாய்
நாளுக்கு நாள் உணர்வூட்டி உயிராகிறான்
வண்ணங்களால் வகையாக வரைந்த சித்திரமே

உன்னைக் காண எத்தனை பேர்
காற்றாடியாய் பறந்து வானமே உன்னிடம்
அழகான பார்வையோடு இளசுகளையும் வியப்பூட்டுகிறாய்
கண்டது எல்லாம் நிழலா நிஜமா

வித்தைகள் கற்று விண்ணிலும் செல்ல
வியனுற வழியனுப்பி பார்க்கும் இடமெல்லாம்
நீ புன்னகைக்க நானும் பூவோடு
உனக்கு தாலாட்டுப் பாடி மகிழ்கிறேன்.

கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# பேரன்பு

எது வேண்டும்
எது வேண்டாம் என்ற
தேவைப்பாடுகளை
நான் தேடுமுன்னே
நிவர்த்திக்குமுன் பேரன்புக்கு
என் தந்தையின் சாயல்!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# அழகு!

சிற்பியின் செதுக்களில் சிலை அழகு
கடலின் அசைவில் அலை அழகு
உயர்ந்து வளர்வதில் மலை அழகு
வானை இரசிப்பதில் நிலா அழகு
நதியின் அசைவில் மீன்கள் அழகு
காலை புலர்வதில் கதிரவன் அழகு
பூவின் இதழில் பனித்துளி அழகு
மழையை தருவதில் காடுகள் அழகு
மழலை மொழி புரியாதது அழகு
உதவும் கரங்கள் உயர்வது அழகு
இணைந்து வாழ்வதில் ஒற்றுமை அழகு
கற்றலில் தொடரும் முயற்சி அழகு
புதிரில் கிடைக்கும் தேடல் அழகு
நோக்கும் பார்வையில் நல்லெண்ணம் அழகு
யாவும் யாவருக்கும் அழகோ அழகு



கவிஞர் அகீலா ஜவுபர், ஏத்தாளை புத்தளம் (இலங்கை)

# நட்பு

எங்கிருந்தோ நீவந்தாய்!
அனைத்தும் நீயானாய்!

தாயும் நீயானாய்!
தந்தையும் நீயானாய்!
உதிரமும் நீயானாய்!
உயிர் நட்பும் நீயானாய்!

உனைதினம்பார்க்கவே!
என்விழிகள் நித்தமும் ஏங்கியதே!
உன் அழைப்பிற்காய் நித்தமும் ஏங்கும்
இந்தப்பாவிக்கு நீபதில்கூறாயோ!

தேவையெனவரும்போது
கரம்கொடுத்துமுன்னின்றாயே!
தேவைப்படாபோதிலும்
என்கண்முன்நீநின்றாய்!

இப்பொழுதேனோ எனை
நீமறந்தாய்! மறக்கின்றாய்!

நம்நட்பதை காதலென்பதா!
இல்லை அன்பென்பதா!
எதுவென்றுசொல்லவும் முடியவில்லை!
ஊகிக்கவும் முடியவில்லை!

வலிகளில் பெரியது காதல்ப்பிரிவு என்பதை
தலைகீழாய் மாற்றியதே! நம்நட்பு
மீண்டும்எனை நீபார்ப்பாயா!
நாமிருவரும் மீண்டும் எப்பொழுது ஒன்றிணைவோம்!



கவிஞர் இ. தேவர்மன், இலங்கை

# பூவாசம்

பெண்மையின் தலையில்
வாசம் செய்யும்
மலர்கள் காதலின்
கவிதை வரிகளாய்

ஒற்றை ரோஜாவின்
புன்னகையில் காதல்
காற்றின் மொழிகளாய்

ஒரு சில நிமிடங்களில்
மரணம் தேடும் பூக்கள்
அவள் தலையில் சிரஞ்சீவியாய்

கருவறையில் கடவுளின்
காதுகளில் பேசும்
பூக்களின் சத்தங்கள்

மரண ஊர்வலத்தில்
மனித உடலுடன்
கண்ணீர் அஞ்சலிகளாய்

இன்று செயற்கை பூக்களின்
வரவால் பூவிதழ்கள்
காதல் ஊமைகளாய்

பூவாசம் இல்லாத பூக்களின்
முகங்களில் புன்னகையும்
செயற்கையாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# அழுகுரல்

பாலியல் சீண்டல்களால் எங்கேனும் ஒரு
அழுகுரல் கேட்டுக்கொண்டே இருக்கிறது
சாதிய கொடுமைகளால்
எங்கேனும் ஒரு அழுகுரல் கேட்டுக் கொண்டே இருக்கிறது

வேலைவாய்ப்பு இன்மையால்
ஏதேனும் ஒரு அழுகுரல் கேட்டுக் கொண்டே இருக்கிறது
பெண்களின் வேலை சுமையால் எங்கேனும் ஒரு அழுகுரல்
கேட்டுக்கொண்டே இருக்கிறது

குடிக்க பணம் கொடுக்கவில்லை என்பதால்
எங்கேனும் ஒரு அழுகுரல் கேட்டுக் கொண்டே இருக்கிறது
உண்ண உணவில்லை என்பதால்
எங்கேனும் ஒரு அழுகுரல் கேட்டுக் கொண்டிருக்கிறது

உடல் பலம் இல்லை என்பதால்
எங்கேயும் ஒரு அழுகுரல் கேட்டுக் கொண்டே இருக்கிறது
படைபலம் இல்லை என்பதால்
எங்கேனும் ஒரு அழுகுரல் கேட்டுக் கொண்டே இருக்கிறது

காற்று மண்டலத்தில் கரியமல வாயு அதிகரிப்பதால்
எங்கோ ஒரு மூலையில் வானம் அழுது கொண்டிருக்கிறது
கடலில் கழிவுகள் சேர்வதால்
கடலும் அழுது கொண்டே இருக்கிறது

தன் இருப்பிடங்களை எல்லாம்
அழித்துக் கொண்டிருப்பதால்
காடுகளின் அழுகுரல் கேட்டுக்கொண்டே இருக்கிறது

விளையாடும் பருவத்தில்
புத்தக மூட்டைகளை முதுகில் ஏற்றுவதால்
குழந்தைகளின் அழுகுரல் கேட்டுக் கொண்டே இருக்கிறது
விலைவாசி உயர்வால் அழுகுரல் கேட்கிறது
வியாதிகளால் அழுகுரல் கேட்கிறது

புகலிடம் வேண்டி அழுகுரல் கேட்கிறது
புரிந்து கொள்ளாமல் அழுகுரல் கேட்கிறது
கடவுளிடம் அழுகுரல் கேட்கிறது
கணவனிடம் அழுகுரல் கேட்கிறது

நீதிமன்றத்தில் அழுகுரல் கேட்கிறது
நீக்கி விடுவதால் அழுகுரல் கேட்கிறது



கவிஞர் புஷ்பா குமார், திருப்போரூர்

# ரமலான்



ரமலான் வந்தால் நம் மனம் மகிழும்
அல்லாஹ்வின் அருள் மழை பெய்யும்
நோன்பு வைத்து நெஞ்சை சுத்தம் செய்கிறோம்
துஆக்களுடன் கை உயர்த்தி நிற்கிறோம்

குர்ஆன் ஓதும் புனித மாதம்
பாவம் மன்னிக்கப்படும் நேரம்
தராவீஹ் முழங்கும் இரவில்
அல்லாஹ்வின் கருணை கொட்டும் நேரில்

லைலத்துல் கதர் சிறப்பான இரவு
ஆயிரம் மாதம் அதில் ஒரு தரவு
தர்மம் செய்து மகிழ்ச்சி பெறுவோம்
ஜன்னத்துல் ஃபிர்தவ்ஸ¬க்கு வழி தேடிச் செல்வோம்

கவிஞர் பானு அப்துல்லா

# நன்னடை



அழகான தமிழின்
ஆழமான வார்த்தை!
ஏட்டில் மட்டுமே
வாழும் கரு(மை)!

வாழ்க்கை நதியின்
இருபக்க கரை!
சான்றோர் மனங்களின்
நிரந்தரமான கறை!

நன்னடை இருந்தால்
சிறக்கும் வாழ்வு!
இல்லையேல் என்றும்
ஏற்படும் தாழ்வு!

வண்ணங்கள் இல்லா
ஓவியம் உண்டோ?
நன்னடை இல்லாத
வாழ்க்கை நன்றோ?

பெண்களை அழகாக்கும்
சிறந்த நன்னடை!
ஆண்களை மதிப்பாக்கும்
நிமிர்ந்த நன்னடை!

சோதனையின் விளிம்பிலும்
அறவழியை மாற்றாதே!
சாதிக்க பிறந்ததை
ஒருபோதும் மறக்காதே!

தினமும் எப்போதாவது
நன்மையை சந்தித்திடு!
வாழ்க்கையில் எப்போதுமே
நன்மையோடு வாழ்ந்திடு!

உனது நல்வழியில்
பயணங்கள் சிறக்கட்டும்!
என்றும் உன் பெயரை
உலகம் உச்சரிக்கட்டும்!

கவிஞர் அனல் நிலவன், கொசவபட்டி, திண்டுக்கல்

# இறங்கும் இதயச் சுமைகள்

நதியாய் ஓடும்
வாழ்க்கை நகர்வுகளின்
வலிகள் ஒன்றுகூடும்
இதயக் கானகத்தில்

ஒழிக்கப்பட்ட எண்ணிலங்காத
கவலைக் குவியல்கள்
அகன்ற இதவறைக்குள்
இடம்விடாமல் அமர்ந்தபடியே

அசைவின்றி அசையும்
எண்ண அலைகளோடு
போக வழியின்றி
போராட்டக் களத்தில்

இறையோனைத் தொழுதிட
நெற்றி முட்டியதும்
பட்டதும் கொட்டும்
பூவிதழ்களாய் உதிர்கிறது

கனத்த நிமிடங்கள்
கைகுலுக்காமல் கலைகிறது
மீளமுடியாமல் குனிந்த
தலையோடு முடிந்துவிடுமா
இந்த வாழ்க்கை.



கவிஞர் சேஹூ மொஹம்மது பெனாஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ (மதவாச்சி)

# விண்ணைத்தாண்டும் மண்ணுயிர்கள்

உம்மத்தினரே
உலகோர் கண்களில்
நாம் மறைக்கப்பட்டிருக்கலாம்.

உயிர் தந்தவனின் அழைப்பு
உயில் எழுதப்பட்ட விதியல்லவா
உலக வரைபடத்தில்
களவாடப்பட்ட நம் தேசம்

மண்ணால் படைக்கப்பட்டோம்
மண்ணை முத்தமிட்டுச்செல்கிறோம்
மண்ணறையை
கருவறையில் கண்டவர்கள் நாம்

யுத்தம் சற்றே ஓய்ந்து
சத்தமின்றி மூச்சுவிடுகையில்
குண்டு மாரி பொழிந்து
முண்டங்களாய் சிதைந்து போகிறோம்.

அன்றே எழுதப்பட்ட விதி
அயராத நம் ஷாமின் வெற்றி
கண்ணீர் விடவேண்டாம்
கடைசிவரை நம் தேச விடுதலைக்காய்
கையேந்துங்கள் அது போதும்.

உம்மத்தினரே நோன்பிருந்து
உம்மத்தின் ஒற்றுமைக்காய் தொழுது
பிரார்த்தியுங்கள்
பின்னாளில் வென்றே தீரும்!

குண்டுமாரிக் குருதி மழையில்
குளித்துக் கொண்டிருக்கும்
இடிபாடுகளைத் தாண்டி உயரே
இறை அழைப்பை ஏற்றுக் செல்கிறோம்.



கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்ட தேசமது
நபிமார்கள் வாழ்ந்த நிலம்
நட்சத்திர ஒளியாய்த் தெரிகிறது.

குடையாய் விரியும் வானம் சாட்சி
குருதியில் நனைந்து
சல்லடையாய்ச் சிதையும்
குழந்தைகளின் வதனங்கள் சாட்சி
கனவுகள் என்றும் ஒன்றேதான்!

கவிஞர் செண்பகச் சோலையாள் ஆய்ஷ் (கம்பளை)

நட்பு

ஆயிரம் பந்தங்கள் உடன் இருந்தாலும்
உரிமையாய்உணர்வாய் அன்பாய் அழகாய்
என்றும் விட்டு பிரியாது
உடன் இருந்திடும் உறவுதான் நட்பு.

நட்பின் இனிமை வாழ்க்கையை இனிமையாக்கும்.
சொல்ல வார்த்தைகளில் அடங்காதது நட்பு.
நண்பர்கள் இல்லாத வாழ்க்கை வண்ணமில்லாத
ஒரு ஓவியத்தை போன்றதுதான்.

இன்பம் துன்பம் அழுகை சோகம்
ஆறுதல் அரவணைப்பு தன்னம்பிக்கை ஊக்கம்
என உறவுகள் கொடுப்பதை விட
நண்பர்கள் கொடுப்பது வாழ்வின் வரம்.

நட்பு பூக்களால் ஆன மாலை.
ஒவ்வொரு நண்பனும் அழகான மலர்
வாழ்க்கையை மணக்க வைக்கும் மலர்கள்.
நட்பு என்றும் வாடா மலர்.

நண்பர்கள் என்பவர்கள் வாழ்க்கை என்ற
வானில் உலாவரும் வண்ணத்துப் பூச்சிகள்.
அவர்களின் சிறகடிப்பு வாழ்வை பிரகாசமாக்கும்.
நண்பர்கள் இருந்தால் வாழ்க்கை சோலைவனம்...



கவிஞர் ரா. ரமேஷ், திருப்பூர்

# ரமழான் மாதம்

அகத்தின்
அழுக்குகளை
அகற்றிடும்
அற்புத மாதம்

கல் போன்ற
'கல்பு'களையும்
கரைத்திடும்
காருண்ய மாதம்

உருகாத
உள்ளங்களையும்
உருக வைத்திடும்
உன்னத மாதம்

இருகிய
இதயங்களையும்
இளக வைத்திடும்
இனிய மாதம்

மாறாத
மனங்களையும்
மாற்றிடும்
மாண்புகள் நிறைந்த
மகோன்னத மாதம்
ரமழான் மாதம்




கவிஞர் நபீல் இப்னு இஸ்மாயில், நமடகஹவத்த, கலேவெல மாத்தளை

# புத்தகங்கள்

புத்தகங்களோடு
குடும்பம் நடத்துபவர்கள்
பெற்றெடுக்கிறார்கள்
நாவல்களையும் கட்டுரைகளையும்
கவிதைகளையும் சிறுகதைகளையும்



கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# பாதையறியா பாதம்



தொலைந்து போகவே விருப்பம்
புரட்டியபின் பக்கங்கள்
கடப்பது போலவே

கிறுக்கி வைத்த வரிகளில்
தொலைந்தது போதும்

பைத்தியம் போன்று
பாதையறியாத ஒரு பயணம்

பகலிரவு அறியாது
வண்ணங்களில் கரையாது
வியந்து வியந்து விழியகலாது

விண்ணைத்தாண்டியொரு பயணம்

மழைச்சாரல் நனைக்கும்
மனதினோரம் மௌனத்தில்

கரையோரப் பறவைபோல்
காலாற சிறு பயணம்!

கவிஞர் ஜெயப்பிரபா

# ரமலான் தினம்

பிறை கண்ட நிலவில் முகம் மலரும் திருநாள்
அகம் நிறைந்த ஒளியில் ரம்ஜானின் பெருநாள்

ஐம்புலன் அடக்கியாளும் ஈந்துவக்கும் உன்னத மாண்பு
ஐந்து கடமைகளில் மூன்றாவது கடமையிலே நோன்பு

ஐந்து வேளை தொழுகையெனும் உவமை
அதுவே அல்லாஹ் நமக்களித்த கடமை

நோன்பென்பது பாவத்திலிருந்து நம்மை காக்கும் கேடயம்
இதைத் தவறாதவர் உள்ளமே அல்லாஹ் வாழும் ஆலயம்

முதல் கடமையில் வருமே கலிமா
முறையாக வழிபட்டால் துன்பம் வருமா

இரண்டாம் கடமையில் வரும் தொழுகை
ஐந்து நேரம் தொழுதால் அல்லா நீக்கிவிடுவார்
பாவமெனும் அழுக்கை

மூன்றாவது கடமையே
ஒன்பதாவது மாதத்தில் வரும் நோன்பு
அதில் ஐம்புலனை அடக்கியாள்வதே
உன்னத மாண்பு

நான்காவது கடமையே ஜகாத்
நிதியில் ஏழைகளுக்கு தானமளி
அதுவே அல்லாஹ்விடம் சேரும்வழி

ஐந்தாவது கடமை ஹஜ் எனும் புனிதயாத்திரை
அங்கு சென்று வந்தாலே பிரகாசிக்கும் அகத்திரை

இக்கவிதையில் குறையிருந்தால்
என்னை மன்னிப்பதும் அல்லாஹ்
நிறையிருந்தால் கட்டி அணைப்பதும் அல்லாஹ்



கவிஞர் சு. வெற்றிவேல், திருப்பூர்

# அன்பை அறுவடை செய்



நிழலின் கனத்தை  பூமி தாங்குமா.
விழும் பிம்பத்தைப்
சுகமான சுகமாக்குமா?

கொடுத்துப் பெறுவதா
கொடையாகக் கொடுப்பதா
கொள்வினை செய்யப்படுவதாக
வேள்விகளின் வேடமிட்டதா?

அள்ளிக் கொடுத்த அன்பும் கூட
அளவுகளுக்குள் அடங்கிப்
போகும் அளவையானதா?

இக்கணமும் கனவாக
இலக்கண  சுத்தமான
உறவுகள் பரிமாறப்
பட்ட பரிணாமங்களா?

கொள்முதல் செய்யும்
கொடுத்த பாசத்திற்கு
எந்தத் துறையாக
தோற்றமும் முகமும்.

கலையாத  கனவாக
கடைந்தெடுத்த அமுதமாக
கட்டளையின்றி கடக்கும்
பரிமாற்றங்களை விதைத்திடு

பெருநேசக் காடு
யவனமாய் பரந்திட
பெருங்கடலாய்  ஊதற்
காற்றமுத்த  மண்டலமாக.

பூக்களாக  மலரும்
பூமத்திய ரேகைகளின்
பூர்வாங்க மணங்களோடே.
பூதகணங்களின் ஓங்காரத்தோடே

விழிநீர்ப் பூக்களின்
பூர்வாங்க வித்தைகளோடு
விரிந்திரிக்கும் அன்பினை
அறுவடை செய்.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

முயன்றே முன்னூறு மொழி கற்போம்.
பயின்றே அவைகளில் முதிர்ச்சியும் பெறுவோம்.
இச்சையாய் பயில்வோம்; செம்மொழி தமிழை
மூச்சென்று வைப்போம்; தாய் தமிழை.




கவிஞர் சசிகலா விஸ்வநாதன், பெங்களூரு

# நினைவுகளின் நித்திரை

கனவுகளில் காட்சியாகி
ஆழ்மனதை பிரதிபலிக்கும்
எண்ணங்கள்
வண்ணங்களாய் மின்னும்
நித்திரை கொள்ளா
நினைவுகள்.
நிஜத்தை நிழலாக்கும்
நிழலை நிஜமாக்கும்.
கடந்ததை களையெடுக்கும்
நிகழ்காலத்தையும்
எதிர்காலத்தையும்
தொலைவில் தொலைத்துவிடும்.



கவிஞர் உஷா தங்கவேல், அரியலூர்

# அலைப்படம்

அவளின் கைப்பிடியில் அலைபேசி
மெய்சிலிர்க்க வைக்கிறது என்னுடைய படம்
பல தொழில்நுட்பங்களை கடந்து
ஈன்றவர்களின் உயிரணுக்களை மீறி
அவள் எடுக்கையில் நான் மிளிர்கிறேன்
ரவிவர்மனும் என்னுடைய படத்தை கண்டு
சிதைந்து இருப்பான் யாருடைய கைவண்ணமென்று
மதிகுழம்பி மதுரசம் பழகி இருப்பானோ
நான் சொல்லிவிடுகிறேன் அவனிடம்
என்னுடைய உள்ளத்தை கொள்ளையடித்தவலென்று.



கவிஞர் முனைவர். அக. வீரவன்சாரா, சிதம்பரம்

# அமைதி பூங்கா

மன்னராட்சி முதற்கொண்டு மக்களாட்சி வரையிலும்
நாடு பிடிக்கும் ஆசையில் பொருளாதாரம் புதைக்குழியில்.
போர்கள் இல்லாத அமைதியின் காலங்களில்
அற்புதம் காணும் காலம்தான் எந்நாளோ.

எல்லோருக்கும் எல்லாமும் கிடைத்திடும் காலங்களே
பூமியில் மக்களெல்லாம் மகிழ்ந்திடும் காலமே.
பஞ்சம் பசி பட்டினி உயிர் குடிக்கும் *போர்கள்* என
அமைதிக்கு வேட்டுவைக்கும் நிலையும் மாறாதோ.

*அமைதி பூங்கா* என புத்துலகம் காணவே
உலகமே ஒரு குடையின் கீழ் அன்பு போற்றி
அன்பை வளர்க்கும் அந்த நாள்தான்
பொன்னாலாய் மலரும் காலம் வராதோ.




கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாதோப்பு

# ஆனந்தம்

இரு விழிகளின் இமைகளும் விரிந்திட
இசையின் துள்ளலை உள்ளமும் ரசித்திட

வண்ணத்துப் பூச்சியாய் மனமும் பறந்திட
வஞ்சியவளின் வதனமும் வெட்கிச் சிவந்திட

மாமன் வரவை எதிர்நோக்கியே
மங்கையவளும் மயங்கிக் கிடந்திட

காலங்கள் பல கடந்தாலும்
காதலுடன் வலம் வரவே காத்துக் கிடந்திட

அத்தை மகன் வரவை எண்ணி
அடுத்தடுத்த நாட்களும் கடந்திட

பரிசம் போட்டு பந்தக்கால் நட்டி
பட்டிதொட்டி எங்கும் பத்திரிகை கொடுத்து

மங்கைக்கும் மணாளனுக்கும்
மணமுடிக்கும் நாளை எண்ணி
மனமும் தான் ஆனந்தம் கொண்டிடுமே!



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# பலூன்

கலர் கலராக
சுதந்திர காற்றை
சுவாசித்து
வீதிகளை அலங்கரித்த
பலூன் கூட்டங்களை
சுமந்து வரும்
பலூன் காரரை
காணவில்லை

பெரிய பெரிய
கடைகளில்
குளிரூட்டப்பட்ட
கண்ணாடிகளுக்குள்
வடிவம் மாறிய
பலூன்கள்
கூண்டுக்கிளிகளாய்

குளிரூட்டப்பட்ட அறைக்கும்
சேர்த்து
பணம் கொடுத்து விட்டு
ஒரு பலூனை
வாங்கி வருகிறேன்
சுதந்திரமாக
பறக்க விட



கவிஞர் அன்னலெட்சுமி சரவணன், ஈரோடு

இதுவரை நான்
பேசிய வார்த்தைகளை
காற்று வெளியில்
தேடுகிறேன்.
அதன்பின்பு தேடுவேன்
நான் வெளியிட்ட
சுவாசக் காற்றை.

#####

காற்றைப் பிடித்தேன்
காட்டத்தான்
முடியவில்லை!
நீங்களும்
பிடித்துப் பாருங்கள்.

####

இலை நுனியில்
மழைத்துளி.
விரல்களால் தொட..
நினைக்கும் முன்பே.
மண்ணைத்தொட்டது
மழைத்துளி!




கவிஞர் சோ. ஸ்ரீதரன், இலங்கை

# வெளிநாட்டு வாழ்வு



பேனா பிடித்தேன் விரல்கள் நடுங்குது
ஏதோ காகிதத்தில் உனக்கான வரிகள்
வெளிநாட்டு வாழ்க்கை இன்பமில்லை
உள்நாட்டு ஜீவனம் போதவில்லை
தூரப்போனால் என் உள்ள உறவுகளைப் பற்றிய எண்ணம்
வாழ்வில் இல்லை இன்பம்
உழைப்பவன் அறிவான் கடினம்

வறுமையில் வாழ்ந்தாலும்
அவள் முகம் பார்த்தாலே எல்லாம் தூரப் போகும்.
அன்பாக பேச யாருமில்லை.

சாப்பிட்டா என்று கேட்க ஆழும் இல்லை
தொடர்பு கொள்ள நேரமில்லை
கொஞ்சி பேசியே நாளும் நினைவில்லை

வெளிநாட்டு வாழ்வுக்கு எப்போ முற்றுப்புள்ளி.
என் கடன் தீரும் வழி என்னவோ

உழைப்பேன் நமக்காக
கண்ணீர் துளியுடன் எதிர்காலம் எண்ணியவனாக.
அவள் முகம் காணவே.

கவிஞர் ஏ. எம். முர்ஷிதா பேகம், இலங்கை

# நட்பென்னும் நந்தவனம்

உள்ளம் மலர்ந்தேன் கள்ளமில்லா நட்பாலே
உன்னால் அல்லவா உயர்ந்த நந்தவனமே
பருவ காலத்தில் உரிய நேரத்தில்
புருவம் உயர்த்தவே உள்ளம் கலந்தோம்
என்னை அறிந்தாய் உன்னை வியந்தேன்
உணர்வை உணர்ந்தாய் என்னையே மறந்தேன்
தவறு கண்டு தட்டிக் கேட்டாய்
தன்னார்வம் மிகும்போது தட்டிக் கொடுத்தாய்
கட்டிக் காக்கவும் கொட்டித் தீர்க்கவும்
கட்டித் தங்கமாய் எனக்குக் கிடைத்தாய்
கேட்டால் வரம் தரும் தெய்வம்
கேட்காமலே வாரி வழங்கி உய்த்திடுவாய்
உயிரில் கலந்த எந்தன் உறவே
உயர்வாய் என்னை வளர்க்க மறவாய்
அழகாய் பழகிய நமது காலங்கள்
மழையிலும் கரைந்திடா வண்ணக் கோலங்கள்
தொலைவில் இருந்தாலும் இதயம் நேசிக்கும்
அலைந்து திரிந்தாலும் இதழ்கள் பேசிடும்
பல்பொருள் அங்காடியில் பணி புரிந்தாய்
தொல்பொருள் ஆய்வாய் நனிசிறந்து தெரிந்தாய்



கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# காற்றாய் கரைந்த காதல்

விலைமதிப்பற்ற  இரத்தின பதக்கமாய்
என் சிறு இதயத்தில் பதுக்கிக் கொண்டேன்
உன்  மேல் வைத்த அளவற்ற நேசத்தை
கானல் நீராய் கரைந்தது அந்நேசம்
கடற்கரையில் கிறுக்கி வைத்த எழுத்தைப் போன்று
நீ என் பக்கத்தில் இல்லையெனினும்
கல்வெட்டில் பதிக்கப்பட்ட சொற்கள் போன்று
உன் நினைவுகள் என் மனதினில் பதிந்து விட்டன ஆழமாய்
நீ பேசாத பொழுதெல்லாம் பேசுகின்றன உன் நினைவுகள்
அதே நினைவுகள்  சில சமயம்
இதயத்தை உருக்கும் நெருப்பாகவும் மாறுகின்றதே
என்னை விட்டு நீ தூரமாய் விலகியிருப்பினும்
உன் மனதிலிருந்து என்னை மொத்தமாய்
தூக்கி யெறிய வில்லையென்றும் எனக்குத் தெரியும்
காற்றில் கரைந்த நேசத்திற்கு
தினம் சிந்தும் கண்ணீர் துளிகளே அறி குறி
உன் விலகலுக்கு காரணமறியாது தவிக்கிறது  உள்ளம்
உன் பதிலற்ற மௌனத்தில் செல்கிறேன் கடந்த காலத்திற்கு
சத்தமிட்டு உன் பெயரை கூட உச்சரிக்க முடியாத நிலை எனக்கு
ஆனால் மனதிற்குள் உன்னை அழைக்காத நாளில்லை
நட்பில் தொடங்கி காதலென்று அறியாமலே நேசத்தில் நின்றோம்
அதிகாலை நான் கண் விழிக்கும் உன் கவியஞ்சலும் மூடிக்கிடக்கிறது
அதை என் விழிகள் நோக்கையில்
இதழ்கள் கூறாத வலிகளை விழிகள் கூறி
கண்ணீர்த்துளிகளை சிந்துகின்றனவே
கலங்கி நானும் தனிமையில்  நடக்கையில்
என் காலடி ஒலி கூட என் தனிமையை கேலி செய்கிறது
உன்னோடு கதைத்து மகிழ்ந்த நாட்கள் மறைந்து
மௌனமெனும் முகமூடியால்  அளவற்ற நேசத்தை
எனக்குள்ளே புதைத்துக் கொண்டேன்
காற்றாய் என் காதல் கரைந்து விட்டதென்றாலும்
உன் நினைவுகள் இருக்கமாய்
என் உள்ளத்தில் வேறாய் பதிந்திருக்கிறது



கவிஞர் ரஸீனா ரமீஸான், அக்குறணை

# என் பிரியசகியே

ஊரடங்கும் சாமம்
ஒற்றைப் பனைமரம்!

அங்குமிங்கும்
அலைபாயும் கார் கூந்தல்!

சொல்லில்
தொட முடியாத ஏகாந்தம்!

இன்பத்தை வாரியிறைக்கும்
வனிதையின் முகம்!

குவளை விழிகள்
ஆசைக் கனவுகள்!

ஆர்ப்பரிக்கும் இதயம்
உனக்காக என்றாய்!

சித்தினி சிரிப்பினில்
சில்வண்டு ரிங்காரம்!

தவித்தேன் துடித்தேன்
என்றதெல்லாம் பொய்யா?

மா மலையாய்
பொன் கொட்டியதும்

மாயமானதோ
என் பிரிய சகியே!



கவிஞர் யாழிசை செல்வா, திருப்பூர்

# கண்ணில் தெரியும் கதைகள்!



கண்கள் சொல்கின்ற கதைகள் பலவாகும்!
கண்களின் வார்த்தைகளில் பருவத்தில் காதல்மொழி!
பிணியும், மருந்துமாய் இருந்திடும் பார்வையதும்!
பிரிவில் வருந்துகையில், இதயத்தின் வலி
கரைந்துருகி கண்ணீரால் கதைகள் சொல்லும்!
வறுமையின் தாக்கம்! கண்களில் ஏக்கம்!
தூக்கம் தொலைத்த இரவுகளின் தாக்கம்!
கனவுகளின் தேக்கம்! விடியலுக்கு ஏக்கம்!
எதிர்பாரா தருணத்தில் எதிர்பார்ப்பு ஈடேற
வியப்பால் விரிந்து மகிழ்ந்திடும் கண்கள்!
ஒற்றை நொடியில் உணர்வுகளைத் தெரிவிக்கும்
ஆற்றல் கொண்டது கண்களின் மொழியாகும்!
துரோகம், ஏமாற்றம் எதிர்கொள்ள நேர்கையிலே
சிரிப்பின் பின்னே சோகத்தை ஒளித்து
பார்வை வெளிப்படுத்தும் வருத்தத்தின் வலியினையே!
சீற்றம் சிலநேரம்! திரும்பிடும் இயல்புநிலை!
மாறிடும் கண்கள் கருணையின் வடிவாக!
மறைந்த உறவுகளை மனத்துள் நினைக்கையிலே
தூரத்தில் நிழலாய் நேசித்த நாட்கள்!
காதல் மறவாத இதயத்தின் ஆசைகளை
கதைகளாய்ப் பேசிடும் கண்களின் மௌனமொழி!
பார்வையில் இருந்திடும் பல்வேறு நினைவலைகள்!
காலம் கடந்தாலும் கதைசொல்லும் கண்கள்!

கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி




நாலாயிர பிரபந்தம் திவ்வியமே! முதலாயிரம்
கொண்டிலங்கும் "திருமாலை"! கற்கும்நூல், மற்றமைந்த
ஸ்ரீகாந்தன் இரண்டுமாகும்! தொண்டரடிப்பொடி யாப்பதுவே!
நாற்பத்து ஐந்துளது! திருவரங்கன் பற்றியதே!
அறுசீர்கொள் கழிநெடிலடி ஆசிரிய விருத்தமதே!
கலியுகத்தில் பகவானை அடைதற்கு எளியவழி
நாமமதின் சங்கீர்த்தனம்! முதல்மூன்று எம்பெருமான்
அனுபவிப்பே! பின்தொடரும் பதினொன்று ஆழ்வாரின்
உபதேசம்! தொடர்பத்தோ திருத்துகின்ற முயற்சிகளே!
மறுபத்தோ தீமைமிகு மானுடனை காத்தருளும்
பாங்குரைக்கும்! பகவானை விலகுகின்ற ஆழ்வாரை
மூன்றுரைக்கும்! இரத்தினமாம் பாடலாகும் துவயமந்திரம்
விளக்கிடுமே! பின்னாறு பக்தனவன் பெருமைதனை
பகர்ந்திடுமே! பாசுரத்தின் பயனுரைக்கும் ஒருபாடல்!
பிரளயத்தே உலகுகாக்க உண்டுமிழ்ந்த அரங்கனவன்
நாமத்தை சாற்றுவதே! தொண்டரடி பாணாழ்வார்
அநுமாரும் வைகுந்தம் வேண்டாரே! அரங்கன்புகழ்
பாடுவதே வேண்டிநின்றார்! மறுபிறவி வேண்டாமெனல்
மூன்றாவது பாவாகும்! மிகுபாவம் சேர்ந்தாலும்
வைகுந்தம் சேர்த்திடுமே அரங்கன்பேர் ! மாதின்பம்
வயிற்றினது பேரூணும் விலக்கியே திருமாலின்
தொண்டமுது சுவைத்திடலே கொண்டுமகிழ விழைவாரே!
முதலைந்து கொண்டிட்டோம்! மற்றவைகள் தொடர்ந்திடுமே !

கவிஞர் கணக்காயன் (இ. சே. இராமன்)

# கடல்

நீல வண்ணத்தில்
நிலத்தில் நெளியும் வானமே
பைந்தமிழில் சொல்லெடுத்து
பாடுகிறேன் உனக்கு கானமே

நீண்ட நெடிய பரவையே
உறைய வைக்கிறாயென்
விழித்திரையையே

கருமேகத்துடன் உனக்குப் பெருங்காதலோ?
உன்னிடம் தஞ்சம் அடைந்தே நெஞ்சம்
நிறைகிறது

ஆழ்கடலில் மௌனம் தாங்கி நிற்கும் ஞானி நீ
கரையினில் தரையைத் தொட்டு மகிழும் மழலை நீ
பாரியாய் பல்லுயிர்க்கும் இடமளிப்பாய்
வாரி சுருட்டி வங்கத்திற்குள் வைத்தும் கொள்வாய்

வீழ்கின்ற மழைக்கு
வியக்க வைக்கும் ஆடை தர
ஆழ்கடலில் அலைநெசவு செய்கிறாயோ?

மங்காத் தமிழை நீ..
மடக்கென்று குடித்ததாலென்னவோ?
பூப்பெய்திய பெண்ணாக
பொழிவுடனே இருக்கிறாய்

நீல வயலில் இரவிலே பூக்கும்
நிலவுப்பூவுடன் நீ மௌனமொழியில்
மனத்தலுள்ளதை கதைப்பதழகு

பேராண்மையுடன் வாழ்ந்து
பெருங்கடலாய் எங்களை சூழ்ந்து
பிரமிக்க வைக்கிறாய்
பெரும்பரவையே



கவிஞர் விஜயலக்ஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

# சில ஆம்களும் சில இல்லைகளும்

உடல் மொழியால் மலர்ச்சியும்
பேச்சால் உற்சாக வார்த்தைகளும்
உச்சரிக்கப்படுகிறதுதா
ஆம் எனில்
மனது ஆனந்த நர்த்தனம்
ஆடுகிறது என்று பொருள்

சிறிய சங்கடத்துக்கும்
வசை மொழிக்கும்
முகம் வாட்டமாகி
கண்ணீர் எட்டிப்பார்க்கிறாதா
ஆம் எனில்
மனம் ரணமாகி
நாளாகிவிட்டது என்று
அர்த்தம்

உடல் வாட்டத்தைப் பார்த்து
உடம்பு சரியில்லையா?
ஏதாவது பிரச்சனையா?
என கேட்கும்போது
இல்லை என்றால்
பகிர விரும்பவில்லை
என்று அர்த்தம்

கண்களையும்
பேச்சையையும்
கவனித்து
ஏதாவது மறைக்கின்றாயா
என வினவும்போது
இல்லை என்றால்
பொய்யை நீருபிக்கும்
முயற்சி என்று பொருள்.



கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

ஒவ்வொரு மூச்சிலும்
உன்னைத் தேடி
சுவாசத்தை வீசுகிறேன்
*

கேட்டு விடலாம் எளிதாக
அத்தனை சுலபமா
முத்தம் வழங்குதல்
*

வாழ்க்கை இருட்டில்
வெளிச்சம் வீச
உன் இமை திற
*

கற்றுக் கொடு
சுவாச நீச்சல்
உன் அன்பு நதியில்
*

வேராய் நீ
உனை உறிஞ்சி
பசுமையாய் நான்
*

கன்னத்தில் கொடுத்தாய்
காலம் முழுக்க
இதயத்தில் இனிக்கிறது
*

நினைவு நதிகள்
நகர்ந்து நகர்ந்து
உன்னிடம் சங்கமிக்கின்றன
*

வார்த்தைத் தீயால்
என்னைச் சுட்டாய்
வடுவாய் உன்னுள் நான்
*



வெற்றியின் எல்லையில்
உழைத்த முயற்சிகளைவிட
பெரிதெனப்படுகிறது உன் முத்தம்
*

புலியாய் இருந்தேன்
புள்ளிமானாய் வந்து
வேட்டையாடினாய் என்னை
*

ஆயுள் முழுக்க
அவளைச் சுமக்க
எனக்குமுண்டு கருப்பை
*

ஒவ்வொரு தோல்விக்கு(ம்)
கண்ணீர் மருந்திட்டு
முத்தத் தாலாட்டுவாய்

கவிஞர் இளையவன் சிவா



இவ்வாறெல்லாம் சொல்ல கூடாது என்று
குழந்தையை கண்டிப்பதை விடுத்து
இவ்வாறெல்லாம் குழந்தை காதில் கேட்க கூடாது என்று
உங்களை வரைமுறை கொள்ளுங்கள்
***

கடிதங்கள் குறைந்த பின்
இந்த வார்த்தையும் கேட்கலில்லாமல் ஆயிற்று
"இப்படிக்கு"
***

காடு மலை கண்டம் தாண்டி
வழி மாறா பறவை
கையடக்க செல்ஃபோனால் திசை மாறி இறந்தது
***

பெயரை முழுமையாக மரியாதையுடன் படிப்பது
அவள் கோபமாய் உள்ளதற்கு சான்று
சொல்லுங்க மிஸ்டர் சிரஞ்சீவி இராஜமோகன் ???
***

எதையும் பொருட்படுத்தாதவர்கள்
பார்ன் வித்
சில்வர் ஸ்பூன்.
***

சில சினிமாக்களை
பார்க்காமலே
விமர்சனம் செய்துவிடலாம்
***

மகள்களின் பெயர்களே
வண்டியில் அதிகம் ஒட்டப்படுகிறது
தந்தையால்
***

ஈகோ
என்ற வார்த்தையில்
அதை எப்படி பயன்படுத்த வேண்டும் என்றுள்ளது
லெட் இட் கோ
***

செல்வந்தனுக்கு தான் ஆடம்பர ஆடை தேவை
ஏழைக்கு எல்லா ஆடைகளும்
அழகு தான்.
***

உறவுகென்ற மரியாதை
மூன்றாவது நபர்
பேசாததில் உள்ளது

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

# முகவரி தேடும் காற்று

நிழல் யுத்தம்

அத்தியாயம் 3

(புதினம்)

காபி எடுத்துக் கொண்டு வந்த ராணி அவன் எங்கே போகிறான்? " என்றவள் வேகமாக வாசலுக்கு வந்த "அரசு நீ எங்கேயும் போக வேண்டாம். உனக்கு என்ன வேண்டும் சொல். நான் தருகிறேன்." என்றாள்.



"அம்மா நான் சொல்கிறபடி இந்த வீட்டில் எதுவும் நடக்கப் போவதில்லை.நீங்கள் வழியை விடுங்கள்." அம்மாவின் கையைத் தட்டி விட்டு வெளியே நடந்தான் அரசு.

"அரசு... நீ போகாதே. அம்மா ரொம்பா தவித்துப் போவாள். உன் வழிக்கே நான் வருகிறேன். வீட்டிற்குள் வா." என்ற படி அவனருகில் வந்தா ஜே.கே.

ஒரு நிமிடம் நின்று தந்தையை நின்று பார்த்த தமிழரசு,"இந்த யுத்தம் ஆரம்பித்து ஒரு வருடமாகிவிட்டது அப்பா. நான் கல்லூரி முடிநத்தவுடன் உங்களிடம் கேட்டேன். அன்று நீங்கள் தனித்துச் செயல் பட அனுமதித்திருந்தால் நான் இன்று ஒரு அஸ்திவாரமாவது அமைத்திருப்பேன். இப்படியே நீங்கள் உங்கள் பிஸினஸ் சாம்ராஜ்யத்திற்குள் இழுத்துப் போட்டுவிடலாம் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறீர்கள்."

"ஒன்று உங்களுக்குத் தெரியுமா? நான் எங்கே போனாலும் ஜே.கே. அங்கீகாரம் என்னைத் துரத்துகிறது. ஜே.கே.சாரின் மகன் என்பதால் பல சலுகைகள் எதிர் பார்க்காமலே மடியில் வந்து விழுகிறது. எனக்காக என்று விருத்தியடையச் செய்த உங்கள் வியாபார சாம்ராஜ்யத்தை நீங்களே கட்டிக் கொண்டு கொண்டாடுங்கள். நான் தமிழரசாக அடையாளப்பட வேண்டும்.அதற்கு எனக்குள்ள அத்தனையும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்." என்றான் அரசு.

"தனியாகப் போனால் செத்துப் போவாய் அரசு. அப்பாவிடம் சவால் விட்டு வந்தோமே.. இனி எந்த முகத்தோடு போவோம் என்று வருந்தியே காணமல் போய்விடுவாய். உனக்காக நான் வளர்த்து வைத்திருக்கின்ற சாம்ராஜ்யத்தை விரிவாக்கு. ஜெயக்குமாரின் பெயரைத் தகர்த்தெரிந்து விட்டு புதிய சாதனைகளை செய்து காட்டு. எந்த நாடுகளிலெல்லாம் இன்றும் உன் தந்தையால் காலடி வைக்க முடிய வில்லையோ அங்கே போய் கொடி நாட்டு. அதை விட்டு விட்டு ஏன் இப்படி பிடிவாதம் பிடிக்கிறாய் என்றுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது." சிரித்துக் கொண்டே சொன்னார் ஜே.கே.

"அந்த மாதிரி எதுவும் வேண்டாம். நான் தனியாக என் காலில் நிற்க வேண்டும்."
"சும்மா கதை விடாதே அரசு! நீ ரோட்டிலே போய் பிச்சை எடுத்தால் கூட ஒரு

கவிஞர் இரஜகை நிலவன்

நாளைக்கு அம்பது ரூபாய் சம்பாதிக்க முடியாத நிலைதான் இன்று."

"நான் ஏன் பிச்சை எடுக்க வேண்டும். என் தந்தை பெரிய கோடீஸ்வரர். மும்பை பெரும் புள்ளிகளில் ஒருவர். அவரிடம் இல்லாத பணமா? ஒரு பத்துகோடி ரூபாயை வாங்குக் கொண்டு போய் பிஸினஸ் பண்ணப் போகிறேன்."

"அப்படி வா அரசு வழிக்கு! நீயோ உன் காலிலே நின்று தமிழரசின் பெயர் நிலைக்க வேண்டும். அந்தப் பெயரின் விரிவில்தான் உன் உயரம் இருக்கிறது என்று கருதுகிறாய். அதற்கு என் அஸ்திவாரம் எதற்கு? நீ உன் காலில் நிற்க விரும்புகிறாய். போ...போய் நில். என்னிடமுருந்து ஒரு சல்லிக்காசு கூட எடுக்காமல் எதிர்பார்க்காமல் போய் சம்பாதித்து உன் பெயரை நிலை நிறுத்து." தன் அஸ்திரத்தை உபயோகித்தார் ஜே.கே.

"இப்படி வெளியே நின்று பேசிக் கொண்டு விவாதம் பண்ணிக் கொண்டிருக்கப் போகிறீர்களா? உள்ளே வந்து அமர்ந்து கொண்டு பேசலாமே" பதட்டமாகச் சொன்னாள் அம்மா.

"இப்போதுதான் சூடு பிடித்திருக்கிறது. வாங்க அப்பா உள்ளே போய் அமர்ந்து தர்க்கம் பண்ணாலாம்" என்று அரசு உள்ளே வர பின்னாலே ஜே.கே.வும் உள்ளே வந்தார்.

"அம்மா டிபன் என்னது?" என்றான் அரசு.

"பக்கோடாவு லட்டும் இருக்கிறது. காபியை சூடாக்கித் தருகிறேன்."

"அரசு தனியாக நிற்க விரும்பி பிடிவாதம் பண்ணிய பிறகு இங்கே பச்சைத் தண்ணீர் குடிப்பது கூட தவறுதான் என்று புரியவில்லையா? " ஜே.கே. உண்மைகளை உணர்த்த விரும்பினார்.

"அதுவும் சரிதான். இப்போது என்னைத் தனியாய் என் காலில் நிற்க அனுமதிக்கிறீர்கள் அப்படித்தானே."

"இவ்வளவு பிடிவாதமாக இருக்கும் என் மகனை விட்டுப் பிடிப்பதுதான் நல்லது என்று நினைக்கிறேன். ஒன்று மட்டும் சொல்கிறேன் அரசு. இரண்டு நாளிலே அல்லது நாளைக்கே நீ வீடு திரும்ப வேண்டிய இக்கட்டான நிலை வரும். அப்போது தன்மானம் எல்லாவற்றையும் கழற்றிப் போட்டு விட்டு வா. நீ எப்போதும் இந்த வீட்டுப் பிள்ளை.என் மகன் காபி சாப்பிடு." என்றார் உள்ளுக்குள்ளே சிரித்துக் கொண்டு.
"இந்தாம்மா.. பசியாய் இருப்பாய் டிபன் சாப்பிடு" என்றாள் அம்மா.

"அப்புறம் சாப்பிடுகிறேன்." என்று அம்மாவிடம் சொன்னவன் "அப்பா உங்கள் வருமானத்தில் வந்த டிபன், காபி நீங்களே சாப்பிடுங்கள். எனக்கு உங்கள் வருமானத்தில் ஒரு தம்படி கூட தேவையில்லை." என்றவன் கையில் அணிந்திருந்த பிரேஸ்லெட், விரல்களில் கிடந்த வைர மோதிரங்கள், கழுத்தில் கிடந்த செயின், பாக்கெட்டிலிருந்த செல்போன் எல்லவற்றையும் எடுத்து மேஜையில் வைத்து விட்டு "மோட்டார் பைக், கார் இரண்டுமே நிற்கிறது. உடுத்த உடையோடு போகிறேன். முடிந்தால் புதிய துணி வாங்கியதும் இந்த உடைகளையும் அனுப்பி வைக்கிறேன்."என்றவாறு கிளம்பினான்.



தொடரும்...

கவிஞர் இரஜகை நிலவன்

# விதியின் விளையாட்டு

**வாசிப்பு அனுபவம்** **சிறுகதை தொகுப்பு**

சிறுகதை என்ற சொல் சிறியது தான் ஆனாலும் அதன் செயல்வடிவம் மிகவும் பெரியது. உட்பொருள் பெரிதாக இருந்தாலும், அதைச் சுவையாகவும், சுருக்கமாகவும் எழுதி விளங்க வைப்பது தான் சிறுகதையின் சிறப்பு. அத்தகைய சுவை மிகுந்த சிறுகதை நூலாக இந்நூலாகப் பார்க்கிறேன். "விதியின் விளையாட்டு" - (சிறுகதைகளின் தேரோட்டம்) என்னும் அருமையான தலைப்பில் சிறுகதை எழுதிய எழுத்தாளர் சிறுகதைச் சிகரம் திரு. இரஜகை நிலவன் அவர்களின் சிறுகதை நூல் பல்வேறு தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது.




"சந்திப்பு" என்கிற சிறுகதை மருத்துவரான ஜெனிபர் - ராசையா சந்திப்பு, நினைவுகள் முடிவு அழகாக எழுதப்பட்டுள்ளது. "எல்லாம் உனக்காக" சிறுகதையில் பெண் பார்க்க வந்த மாப்பிள்ளை சங்கர் அதிர்ச்சியில் கவிதா என நம்மையும் மூழ்க வைக்கிறார் ஆசிரியர். "மயக்கமா? கலக்கமா?" "நினைவுகளைத் தேடி", "விசித்திரமான வாழ்க்கை" என்று பல நல்ல தலைப்புகளிலும்.... கணவன் வசந்தன், மனைவி பத்மினி இடையில் புவனா - "தீபாவளி" தலைப்பிலும் எழுத்தாளரின் திறமை வெளிப்படுகிறது. "என்னைக் காணவில்லை", "சொல்லாத காதல் செல்லாது" காதல் பற்றிய எழுத்தாளரின் அழகியல் தெரிகிறது.

நூலின் பெயரான "விதியின் விளையாட்டு" தலைப்பில் சூரி காதலித்த விஜயா அண்ணியானதால் தவிக்கும் சூழலில் தாயாக நினைப்பதாகக் கூற சிறுகதை செல்லும் விதம் சிறப்பு.

சிறுகதை என்ற சொல் சிறியது தான் ஆனாலும் அதன் செயல்வடிவம் மிகவும் பெரியது. உட்பொருள் பெரிதாக இருந்தாலும், அதைச் சுவையாகவும், சுருக்கமாகவும் எழுதி விளங்க வைப்பது தான் சிறுகதையின் சிறப்பு. அத்தகைய சுவை மிகுந்த சிறுகதை நூலாக இந்நூலாகப் பார்க்கிறேன்.

திரு ப. பன்னீர் செல்வம், செங்கல்பட்டு

# விதியின் விளையாட்டு

## வாசிப்பு அனுபவம்

## சிறுகதை தொகுப்பு

"விதியின் விளையாட்டு" - (சிறுகதைகளின் தேரோட்டம்) என்னும் அருமையான தலைப்பில் சிறுகதை எழுதிய எழுத்தாளர் சிறுகதைச் சிகரம் திரு. இரஜகை நிலவன் அவர்களின் சிறுகதை நூல் பல்வேறு தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது. "சந்திப்பு" என்கிற சிறுகதை மருத்துவரான ஜெனிபர் - ராசையா சந்திப்பு, நினைவுகள் முடிவு அழகாக எழுதப்பட்டுள்ளது. "எல்லாம் உனக்காக" சிறுகதையில் பெண் பார்க்க வந்த மாப்பிள்ளை சங்கர் அதிர்ச்சியில் கவிதா என நம்மையும் மூழ்க வைக்கிறார் ஆசிரியர். "மயக்கமா? கலக்கமா?" "நினைவுகளைத் தேடி", "விசித்திரமான வாழ்க்கை" என்று பல நல்ல தலைப்புகளிலும்.... கணவன் வசந்தன், மனைவி பத்மினி இடையில் புவனா - "தீபாவளி" தலைப்பிலும் எழுத்தாளரின் திறமை வெளிப்படுகிறது. "என்னைக் காணவில்லை", "சொல்லாத காதல் செல்லாது" காதல் பற்றிய எழுத்தாளரின் அழகியல் தெரிகிறது. நூலின் பெயரான "விதியின் விளையாட்டு" தலைப்பில் சூரி காதலித்த விஜயா அண்ணியானதால் தவிக்கும் சூழலில் தாயாக நினைப்பதாகக் கூற சிறுகதை செல்லும் விதம் சிறப்பு. மிகவும் சிறப்பான சிறுகதை நூலை வெளியிடும் சகோதரர் இரஜகை நிலவன் அவர்கள் தமிழுக்குத் தொடர்ந்து தொண்டாற்ற வேண்டும் என்றும் மேலும் பல நூல்களை வெளியிட வேண்டும் என்றும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். வாழ்க வளமுடன்




திரு ப. பன்னீர் செல்வம், செங்கல்பட்டு

# பரிதிமாற் கலைஞர்

## கட்டுரை

### முன்னுரை



சூரியநாராயணன் என்ற பரிதிமாற் கலைஞர் (சூலை 6, 1870 - நவம்பர் 2, 1903) தமிழறிஞரும், நூலாசிரியரும், தனித்தமிழ் இயக்கத்தில் முதன்மையான பங்கு வகித்தவர்களில் ஒருவரும் ஆவார். இவர் உயரிய செந்தமிழ் நடையில் பேசுவதிலும் எழுதுவதிலும் வல்லவர். நாடகப் புலமை சான்றவர். 'தமிழ் மொழி வரலாறு' போன்ற ஆய்வு நூல்களையும், கலாவதி, ரூபாவதி போன்ற நாடக நூல்களையும், நாடக இலக்கணமான நாடகவியலையும் இயற்றியவர்.

### வாழ்க்கைக் குறிப்பு

மதுரை அருகே விளாச்சேரி ஊராட்சி என்னும் ஊரில் கோவிந்த சிவன், இலட்சுமி அம்மாள் தம்பதியர்க்கு மகனாக இவர் பிறந்தார். வடமொழியை தந்தையாரிடமும், தமிழை மதுரை சபாபதி முதலியாரிடமும் கற்றார். தமிழ்மொழியின் வரலாறு மற்றும் நாடகவியல் (நாடகங்களுக்கான இலக்கணம்) உட்பட பல நூல்களை எழுதினார். கலாவதி (1898), ரூபாவதி என்ற நாடக நூல்களை எழுதி தாமே கலாவதி, ரூபாவதி எனும் பெண் பாத்திரங்களில் நடித்தார். இராவ் பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களால் திராவிட சாஸ்திரி எனச் சிறப்பிக்கப்பட்டார்.

### நூல்கள்:

- ரூபாவதி
- கலாவதி
- மான விஜயம்
- தனிப்பாசுரத் தொகை
- பாவலர் விருந்து
- மதிவாணன்
- நாடகவியல்
- தமிழ் வியாசங்கள்

திரு அ.வில்சன், இதழாசிரியர்

- தமிழ் மொழியின் வரலாறு.
- சித்திரக்கவி விளக்கம்
- சூர்ப்ப நகை - புராண நாடகம்

**பதிப்பித்த நூல்கள்**

- சயம்கொண்டாரின் கலிங்கத்துப்பரணி (1898)
- மகாலிங்கையர் எழுதிய இலக்கணச்சுருக்கம் (1898)
- புகழேந்திப்புலவரின் நளவெண்பா (1899)
- உத்தரகோச மங்கை மங்களேசுவரி பிள்ளைத்தமிழ் (1901)
- தனிப்பாசுரத்தொகை (1901)

**மறைவு**

நவம்பர் 2, 1903-இல் பரிதிமாற் கலைஞர் மறைந்தார். 33 ஆண்டுகளே வாழ்ந்து இவர் மறைந்தபோது இவரது பேராசிரியர் மில்லர் (சுகாட்டுலாந்தைச் சேர்ந்தவர்) பின்வருமாறு புலம்பி அழுதுள்ளது அவரது ஆளுமைக்குச் சான்றாகும்:

" என் புருவம் சுருக்கம் ஏறி, கண்களை மறைக்கும் முதுமையில் வாடுகின்றேன் நான். ஆனால் நடுவயது வருவதற்கு முன்னரே நற்றமிழ்ப்பரிதி அகன்றானே.

**நன்றி**

https://ta.wikipedia.org/பரிதிமாற் கலைஞர்

## நாளை நமதே

# ஒருவனின்
# தெளிவான குறிக்கோளே
# வெற்றியின் முதல் ஆரம்பம்

அகர முதல இலக்கியப் பேரவை

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com